# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1996/26 - 2016 දෙසැම්බර් 06 වැනි අඟහරුවාදා - 2016.12.06

*1996/26 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் 3ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தல்**

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, செயல்நுணுக்க அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகிய நான், நிதி என்னும் விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் இவ் அறிவித்தலை வழங்குகிறேன்.

(1) மேற் கூறப்பட்ட சட்டத்தின் நோக்கத்திற்காக இனங்காணப்பட்ட இரண்டு கட்டத்தில் அமைக்கப்படவுள்ள கொழும்புத் துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டமான அலை தாங்கி அணையைக் கட்டுதல், காணி சீரமைப்பு, நிலமேம்பாடு, முட்டுச்சுவர் அமைத்தல், கடல்நீரை இணைக்கும் கால்வாய்களை அமைத்தல், பிரதான பாதைகளை அமைத்தல், தொலைபேசி, மின், நீர் ஆகியனவற்றை வழங்கல், உத்தேச கொள்வனவாளருக்கு குத்தகை உரிமையை குத்தகைக்கு விடுதல் அல்லது மாற்றுதல் சம்பந்தமான அறிவிப்பு. இதன் மொத்த முதலீடு ஆயிரத்து முன்னூற்று முப்பத்தேழு மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும் (அல்லது வேறு ஏதாவது மாற்றீடு நாணயத்தில் சமமான தொகை) ("கருத்திட்டம்") 269 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட புதிய நிலப்பரப்பை உருவாக்குவதன் மூலம் நாட்டுக்கு குறிப்பிடத்தக்க பொருளாதார மற்றும் சமூக பயன்களை இத்திட்டம் தருவிப்பதோடு செயல்நுணுக்க முக்கியத்துவத்தை ஈர்க்கிறது. குறிப்பிடத்தக்க பங்களிப்பை கருத்திற்கொண்டு 2016, செத்தெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் நோக்கத்திற்காக செயல்நுணுக்க அபிவிருத்தித் திட்டமாக வெளியிடப்பட்டது.

(2) மேற்குறித்த சட்டத்தின் பிரிவு (3) உட்பிரிவு (3) இனது நிபந்தனைகளுக்கு அமைய அலைதாங்கி அணையைக்கட்டுதல், காணி சீரமைப்பு, நிலமேம்பாடு, முட்டுச்சுவர் அமைத்தல், கடல்நீரை இணைக்கும் கால்வாய்களை அமைத்தல், பிரதான பாதைகளை அமைத்தல், தொலைபேசி, மின், நீர் ஆகியனவற்றை வழங்கல், உத்தேச கொள்வனவாளருக்கு குத்தகை உரிமையை குத்தகைக்கு விடுதல் அல்லது மாற்றுதல் ஆகும். மொத்த முதலீடு ஆயிரத்து முன்னூற்று முப்பத்தேழு மில்லியன் அமெரிக்க டொலர் (அல்லது வேறு ஏதாவது மாற்றீடு நாணயத்தில் சமமான தொகை) கொண்ட இக் கருத்திட்டத்திற்கு இரண்டு கட்டத்தில் கொழும்புத் துறைமுக அபிவிருத்தித் திட்டமாக வெளிப்படுத்த அமைச்சரவையின் அமைச்சர்களிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது.

(3) மேலே குறிப்பிடப்படும் செயல்நுணுக்க அபிவிருத்தித் திட்டம் இரண்டு கட்டங்களில் அலைதாங்கி அணையைக்கட்டுதல், காணி சீரமைப்பு, நிலமேம்பாடு, முட்டுச்சுவர் அமைத்தல், கடல்நீரை இணைக்கும் கால்வாய்களை அமைத்தல், பிரதான பாதைகளை அமைத்தல், தொலைபேசி, மின், நீர் ஆகியனவற்றை வழங்கல் உத்தேச கொள்வனவாளருக்கு குத்தகை உரிமையை குத்தகைக்கு விடுதல் அல்லது மாற்றுதல் போன்றவற்றை உள்ளடக்கிய கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்திக்கான திட்டமென அழைக்கப்படும். அத்துடன் இக் கருத்திட்டத்தை வரையறுக்கப்பட்ட CHEC கொழும்புத் துறைமுக நகர (பிரைவேற்) கம்பனி கையேற்று நடத்தும்.



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*(4) இலங்கை முதலீட்டுச் சபைக்கும் கருத்திட்டக் கம்பனிக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட மூன்றாவது குறைநிரப்பு உடன்படிக்கையில் கூறப்பட்ட திகதியிலிருந்து எட்டு (8) வடங்களுக்குள் அதன் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.*

*(5) இக் கட்டளைக்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களிலிருந்து விலக்களிப்பு அதன்கண் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைய கருத்திட்டக் கம்பனிக்கு ஏற்புடையதாயிருக்கும்.*

*(6) கருத்திட்டக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட சீன துறைமுக பொறியியல் கம்பனி* (CHEC) *கருத்திட்டத்திற்கான பொறியியல், கொள்முதல் செய்தல், நிருமாணித்தல் போன்றவைகளுக்கான ஒப்பந்தக்காரராகும். இது வரையறுக்கப்பட்ட சீன தொடர்பாடல், நிருமாண கம்பனியின் துணைக் கம்பனியாகும். ஆகவே வரையறுக்கப்பட்ட சீன துறைமுக பொறியியல் கம்பனி* (CHEC) *கருத்திட்டத்தை செயற்படுத்தும் காலப் பகுதிக்குள் பெற்றுக்கொள்ளும் இலாபத்திற்கு திருத்தப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான சட்டத்தின் ஏற்பாடுகளின் படி கீழே அட்டவணை* II *இல் நன்கு விபரிக்கப்பட்டுள்ள சலுகைகள் வழங்கப்படும்.*

## *அட்டவணை* I

*(1)* ***2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம்***

(i) *நிறுவக வருமான வரி*

*கருத்திட்ட கம்பனிக்கு குறித்த கருத்திட்ட செயற்பாட்டினால் ஏற்படும் இலாபம் மற்றும் வருமானத்திற்கு இருபத்தைந்து (25) வருட காலப்பகுதியொன்றுக்கு (வரி விலக்களிப்புக் காலம்) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிரைறச் சட்டத்தின் வருமான வரி விதிப்பு தொடர்பான ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாது.*

*குறித்த கருத்திட்டக் கம்பனி கருத்திட்ட நிருமாணத்தை ஆரம்பித்து ஆறு (6) வருடங்களின் பின் அல்லது வரி செலுத்தும் இலாபத்தை ஈட்டும் (இவற்றில் எது முதலில் நடக்குமோ அதன்போது) வருடத்தில் குறித்த வரி விலக்களிப்புக் காலம் ஆரம்பிக்கும் (2015, மார்ச் 6 இற்கும் 2016, ஓகத்து 12 க்குமிடைப்பட்ட காலம் தவிர்க்கப்படும்). இலங்கை அரசுக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கருத்திட்டக் கம்பனி ஆகிய தரப்புகளுக்குமிடையே முத்தரப்பு உடன்படிக்கை பின்னர் குறிப்பிட்ட தினத்தன்று கைச்சாத்திடப்பட்டது.*

*மேற்குறிப்பிட்ட வரிவிலக்களிப்புக் காலம் காலவதியானதும் கருத்திட்டக் கம்பனியின் இலாபம் மற்றும் வருமானம் மீதான வருமான வரியை அச்சந்தர்ப்பத்தில் நடைமுறையிலுள்ள உண்ணாட்டரசிறைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செலுத்துதல் வேண்டும்.*

(ii) *பங்கு இலாபங்கள் மீதான வரி*

*விலக்களிக்கப்பட்ட இலாபங்களிலிருந்து பங்குதாரரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் இலாபங்கள் சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதியான இருபத்தைந்து (25) வருடங்களுக்கும் அதன் பின்னர் ஒரு (1) வருடத்திற்குமாக வருமான வரியிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.*

(iii) *நிறுத்தி வைத்தல் வரி*

(iv) *கருத்திட்ட கம்பனிக்கு பின்வரும் விடயங்கள் தொடர்பான நிறுத்தி வைத்தல் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.*

*(அ)* *மூலதனச் செலவுக்காகப் பெறப்பட்ட வெளிநாட்டு கடன்கள் மீதான வட்டி மற்றும் உசாத்துணையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட தொழில்நுட்பக் கட்டணங்கள்.*

*(ஆ)* *முகாமைத்துவக் கட்டணங்கள் மற்றும் பங்குவிதி உரிமைக் கொடுப்பனவுகள் மீது, ஆயினும் அத்தைய கட்டணங்களின் மொத்தத் தொகை மொத்தச் செயற்பாட்டு வருமானத்தின் மூன்று சதவீதத்தை (3%) விஞ்சாமலிருத்தல் வேண்டும்.*

*(இ)* *சந்தைப்படுத்தும் கட்டணங்கள் மீது, ஆயினும் மொத்தச் செயற்பாட்டு வருமானத்தின் ஒன்று தசம் ஐந்து வீதத்தை (1.5%) அத்தகைய மொத்தக் கட்டணங்கள் விஞ்சாமலிருத்தல் வேண்டும்.*

*(ஈ)* *ஊக்குவிப்பு முகாமைத்துவக் கட்டணங்கள் மீது, ஆயினும் அத்தகைய கட்ணங்களின் மொத்தத் தொகை மொத்தச் செயற்பாட்டு வருமானத்தின் பத்து சதவீதத்தை (10%) விஞசாமலிருத்தல் வேண்டும்.*

(v) *உழைக்கும் பொழுது செலுத்தும் வரி (உ.செ.வரி)*

*கருத்திட்டக் கம்பனியின் வெளிநாட்டு ஊழியர்களுக்கு உழைக்கும் பொழுது செலுத்தும் வரி (உ.செ.வரி) செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும். என்ற போதிலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இச் சலுகை ஆகக்கூடிய ஊழியர்கள் முப்பது (30) பேர்களுக்கு மட்டுப்படுத்தப்படும். இந்த மட்டுப்பாட்டுக்கு அடிபணிவாக கருத்திட்ட அமுலாக்கற் காலப்பகுதியில் கருத்திட்ட*

அமுலக்கதிற்கான வெளிநாட்டு ஊழியர்களுக்கும் கருத்திட்டத்தின் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பித்த தினத்திலிருந்து பத்து (10) வருடங்கள் எனும் காலப்பகுதியில் கருத்திட்ட செற்பாட்டுக்கான வெளிநாட்டு ஊழியர்களுக்கும் இவ் விலக்களிப்பு ஏற்புடையதாகும். ஆயினும், எந்வொரு ஊழியருக்கும் இவ்விலக்களிப்பு பத்து (10) வருடங்களுக்கு மேலாக வழங்கப்படலாகாது. மேலும் கருத்திட்டக் கம்பனி சிறந்ததொரு முயற்சியாக படிப்படியாக வெளிநாட்டு ஊழியர்களை உள்நாட்டு ஊழியர்களைக் கொண்டு மாற்றீடு செய்யவேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுகிறது.

(2) **2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம்**

எட்டு (08) வருட கருத்திட்ட அமுலாக்க காலகட்டத்தின்போது கருத்திட்ட அமுலாக்கத்திற்கான முதலீட்டுச்சபை அனுமதித்தவாறான அனைத்து பொருட்களின் இறக்குமதி மற்றும் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களின் அல்லது சேவைகளின் உள்நாட்டுக்கொள்வனவு மீது பெறுமதி சேர் வரி செலுத்துதலில் இருந்து விலக்களிக்கப்படும். ஏதும் ஒப்பந்தக்காரர் அல்லது உப ஒப்பந்தக்காரர் ஒருவர் கருத்திட்டத்திற்கு வழங்கும் பொருட்களுக்கும் பெறுமதி சேர் வரி தள்ளிவைப்பு ஏற்புடையதாகும்.

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் ஏற்பாட்டுக்கேற்ப கருத்திட்ட அமுலாக்கக் காலப்பகுதி முடிவடைந்ததும் கருத்திட்டக் கம்பனி பெறுமதி சேர் வரி செலுத்துவதற்கு பொறுப்புடையதாகும்

எனினும், எந்தவொரு குத்தகை உரிமையை கருத்திட்டக் கம்பனிக்கு அல்லது கருத்திட்டக் கம்பனியால் உத்தேச கொள்வனவாளருக்கு நடைமுறையிலுள்ள சட்டத்திற்கு அமைவாக குத்தகைக்கு விடுதல் அல்லது மாற்றுதல் பெறுமதி சேர் வரி செலுத்துவதிலிருந்து விதிவிலக்களிக்கப்படும்.

(3) **2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்**

கருத்திட்ட அமுலாக்க காலப்பகுதியான எட்டு (08) வருடங்களின்போது முதலீட்டுச்சபை அனுமதித்தவாறான கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களின் அல்லது சேவைகளின் இறக்குமதி மீது துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு மற்றும் விதிப்பனவில் இருந்து கருத்திட்டக் கம்பனிக்கு விலக்களிப்பு வழங்கப்படும். கருத்திட்டத்திற்காக கருத்திட்டக்கம்பனி நேரடியாக மேற்கொள்ளும் இறக்குமதிகளுக்கு அல்லது கருத்திட்டத்திற்காக ஒப்பந்தக்காரர் ஒருவர் அல்லது உப ஒப்பந்தக்காரர் ஒருவர் மேற்கொள்ளும் இறக்குமதிகளுக்கும், இல. (08) இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய அத்தகைய பொருட்களைப் பெறுபவர் கருத்திட்டக் கம்பனியாக இருக்கும் வரை, இந்த விலக்களிப்பு ஏற்புடையதாகும்.

(4) **2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச்சட்டம்**

2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் கட்டிடக் கைத்தொழில் உத்தரவாத நிதி விதிப்பனவிலிருந்து கருத்திட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு கருத்திட்ட கம்பனி/ ஒப்பந்தக்காரர்களுக்கு விலக்களிப்பு வழங்கப்படும்.

(5) **1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க கலால் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

கருத்திட்ட அமுலாக்க காலப்பகுதியான எட்டு (08) வருடங்களின்போது முதலீட்டுச்சபை அனுமதித்தவாறான கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்கள் மீதான CESS அறவீட்டிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.

(6) **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்**

கருத்திட்ட அமுலாக்க காலப்பகுதியான எட்டு (08) வருடங்களின்போது முதலீட்டுச்சபை அனுமதித்தவாறான கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்கள் மீதான CESS அறவீட்டிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.

(7) **தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT)**

கருத்திட்ட அமுலாக்க காலப்பகுதியான எட்டு (08) வருடங்களின்போது கருத்திட்டக் கம்பனி, ஒப்பந்தக்காரர்கள், உப ஒப்பந்தக்காரர்கள் CESS அறவீட்டிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படுவர்.
எனினும், எந்தவொரு குத்தகை உரிமையைக் கருத்திட்டக் கம்பனிக்கு அல்லது கருத்திட்ட கம்பனியால் உத்தேச கொள்வனவாளருக்கு நடைமுறையிலுள்ள சட்டத்திற்கு அமைவாக குத்தகைக்கு விடுதல் அல்லது மாற்றுதல் தேசத்தை கட்டியெழுப்பும் வரி செலுத்துவதிலிருந்து விதிவிலக்களிக்கப்படும்.

(8) **கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களின் இறக்குமதி மீதான சுங்கத்தீர்வை, (235 ஆம் அத்தியாயமான, சுங்க கட்டண கட்டளைச்சட்டம்)**

கருத்திட்டக் காலப்பகுதியான எட்டு (08) வருடங்களுக்குள் எதிர்மறை பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைத் தவிர சகல கருத்திட்டம் தொடர்பான மூலதனச் சுபாவத்தைக் கொண்ட பொருட்கள் மற்றும் முதலீட்டுச் சபையினால் அனுமதிக்கப்பட்டவாறு

*வேறு ஏதும் கருத்திட்டம் தொடர்பான பொருட்கள் கருத்திட்டத்தின் தேவைக்காக கம்பனியினால் அல்லது ஒப்பந்தக்காரர்கள் அல்லது உப ஒப்பந்தக்காரர்கள் மூலம் இக் கருத்திட்டத்தின் தேவைக்காக பிரத்தியேகமாக கருத்திட்டத்தைச் செயற்படுத்தும் கம்பனியின் பெயரில் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பிலும் சுங்கக் கட்டண விலக்களிப்பு ஏற்புடைத்தாகும். ஆயினும் அத்தகைய பொருட்கள் அளவிலும் தரத்திலும் கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக நேரகாலத்திற்கு ஏற்றவாறு இலங்கையில் முழுமையாக உற்பத்தி செய்யப்படாத மற்றும் உள்நாட்டுச் சந்தையில் கிடைக்காத பட்சம் எதிர்மறை பட்டியலில் உள்ள பொருட்களுக்கும் சுங்கக் கட்டணத்தில் இருந்து விலக்களிக்கப்படும்.*

*இவ்வாறாக கருத்திட்ட அமுலாக்கக் காலப்பகுதியான எட்டு (08) வருடங்களுக்குள் மேற்குறிப்பிட்டவாறு பொதுவாக கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களை ஒப்பந்தக்காரர் ஒருவர் அல்லது உப ஒப்பந்தக்காரர் ஒருவர் அல்லது மூலமாக அத்தகைய பொருட்களைப் பெறுபவர் கருத்திட்டக் கம்பனி எனக் குறிப்பிடப்பட்டிருந்தால் மாத்திரம் இறக்குமதி செய்ய முடியும். எனவே, அத்தகைய ஏற்றுமதிகள் வேறு ஏதும் இறக்குமதிகளுடன் சேர்த்து செய்யப்பட்டிருப்பின், கருத்திட்டக் கம்பனியின் கருத்திட்டம் தொடர்பான பொருட்களுக்கு மாத்திரம் அத்தகைய சலுகைகள் கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்துவது கருத்திட்டக் கம்பனியின் முழுமையான பொறுப்பாகும். ஏதும் ஒரு காரணத்துக்காக இந் நிபந்தனை மீறப்பட்டிருந்தால் கருத்திட்டத்துக்கான கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் பகுதியாக அல்லாத சகல பொருட்களுக்கும் அச் சந்தர்ப்பத்தில் அமுலில் இருக்கும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் வரிகள் மற்றும் கட்டணங்கள் செலுத்தப்படவேண்டும். ஏதும் ஊழியர், உசாத்துணையாளர் அல்லது கருத்திட்டக் கம்பனியின் ஏதும் நபரின் சொந்த/பிரத்தியேக தேவைக்காக கருத்திட்டக் கம்பனியால் இறக்குமதி செய்யப்படும் சொந்த பாவனைக்கான பொருட்கள் கருத்திட்டம் தொடர்பான பொருட்கள் எனக் கணிக்கப்படமாட்டாது என்பது கவனிக்கத்தக்கதாகும். கருத்திட்ட கம்பனிக்கு 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள விலக்களிகப்புக்கள்/சலுகைகள் காரணமாக, கருத்திட்டக் கம்பனியுடன் சம்பந்தப்பட்டிருக்கம் ஏதும் வாடகையாளர் அல்லது அதன் வேறு தரப்பினருக்கு அத்தகைய சம்பந்தம் காரணமாக அல்லது அதன் விளைவாக ஏதும் விலக்களிப்புக்கள் அல்லது சலுகைகள் வழங்கப்படமாட்டாது என்பது மேலும் கவனிக்கத்தக்கதாகும்.*

**அட்டவணை II**

*(1)* ***2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம்***

(i) நிறுவக வருமான வரி

*வரையறுக்கப்பட்ட சீனத் துறைமுக பொறியியல் கம்பனி ('CHEC') க்கு குறித்த கருத்திட்ட செயற்பாட்டினால் ஏற்படும் இலாபம் மற்றும் வருமானத்திற்கு 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச்சட்டத்தின் வருமான வரி விதிப்பு தொடர்பான ஏற்பாடுகளின் கீழ் விதிக்கப்படும் வரி விதிப்பனவுகளிலிருந்து எட்டு (08) வருட காலப்பகுதியொன்றுக்கு விலக்களிப்பு வழங்கப்படும். குறித்த எட்டு (08) வருட விலக்களிப்பு காலம் வரையறுக்கப்பட்ட சீனத் துறைமுக பொறியியல் கம்பனி ('CHEC') கருத்திட்ட நிருமாணத்தை ஆரம்பித்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கும். ஆனால் 2015 மாச்சு 06 இற்கும் 2016 ஓகத்து 12 இற்கு மிடைப்பட்ட காலம் தவிர்க்கப்படும். பின்பு குறிப்பிட்ட தினத்தன்று இலங்கை அரசுக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கருத்திட்டக் கம்பனி ஆகிய தரப்புகளுக்குமிடையே முத்தரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.*

*மேற்குறிப்பிட்ட வரிவிலக்களிப்பு காலம் காலவதியானதும் வரையறுக்கப்பட்ட சீனத் துறைமுக பொறியியல் கம்பனி ('CHEC')யின் இலாபம் மற்றும் வருமானம் மீதான வருமான வரியை அச்சந்தர்ப்பத்தில் நடைமுறையிலுள்ள உண்ணாட்டரசிறைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செலுத்தல் வேண்டும்.*

*மலிக் சமரவிக்ரம,*
*செயல்நுணுக்க அபிவிருத்தி மற்றும்*
*சர்வதேச வர்த்தக அமைச்சர்.*

*2016 திசெம்பர் 05,*
*கொழும்பு.*

*12-855*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*